27

உ.1.2C.3

# “வியன் தில்லைச் சிதம்பரம்” நூல் பற்றிய பொதுநோக்கு

கலாநிதி. மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா
தலைவர்
சம்ஸ்கிருதத்துறை
இந்துகற்கைகள்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச்சுருக்கம்**

ஈழநாட்டில் யாழ்தீபகற்பத்தில் மேற்குக்கரையோரத்தில் ஈழத்துச் சிதம்பரம் எனும் சிறப்புப் பெயர் பெற்ற கோவில் அமைந்திருக்கும் சிவபூமியாம் காரைநகரில் ஆலவாய்க்குருமணியாக சைவசித்தாந்த ஞானியாக விளங்கியிருந்த சுவாமி முருகேசப்பெருமானின் பிரதம சிஷ்யையான “மேருபுத்திரி” ஆசிரியரினால் ஆக்கப்பட்டிருக்கும் பதிகங்களின் நூலே “வியன் தில்லைச் சிதம்பரம்” எனும் நூலாகும். சைவபக்தி இலக்கியம் எனும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இந்நூல் 2017ம் ஆண்டு சிதம்பரத்தில் முதல் பதிப்பாக தைப்பூச நன்னாளில் தமிழ்நாடு சபாநாயகம் பிரின்டர்ஸ் அச்சகத்தால் வெளியிடப்படுகின்றது. சைவபக்தி இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூலானது ஞான முக்திபெறும் உரிமையைச் சுட்டிக்காட்டி ஞானவாசகத்தினை பேசியுள்ளமையை இந் நூல் முழுவதும் காணமுடிகின்றது. அத்துடன் கோவில் எனவும் சிறப்பிக்கப்படும் தில்லை சிதம்பரத்தையும் மாணிக்கவாசகரையும், திருவாசகத்தையும் மனதில் நிறுத்தி சைவசித்தாந்த உண்மைகளை வெளிக்கொண்டு வருவதாகவும் தனது குருவின் அருளினாலும் ஆஞ்ஞையாலும் ஆக்கப்பட்ட நூலே “வியன் தில்லைச் சிதம்பரம்” ஆகும். இந்நூல் ஞான திருவாசகம் பெண்களும் முக்திபெறுந்தகைமையைக் கூறும் திவ்ய ஞான நூலாகும். மணிவாசகப்பெருமானின் திருவாசகப்பெருமை, அதனுள்ளும் பெண்ணுயிர்களும் முக்திபெறுந் தகுதியுடைமை எனும் இரண்டு நோக்கங்கள் தில்லை நடராஜப்பெருமானால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையை இறைவனின் அருளால் ஆசிரியர் தன் கைப்பட எழுதிய சங்கதியை (சைவபக்தி இலக்கியம் பதிகங்களை) உலகிற்கு உணர்த்தும் நோக்கமே இந்நூலின் ஆக்கத்திற்கு மூலகாரணமாகும் என நூலாசிரியர் நன்கு தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

**திறவுசொற்கள்** : சைவபக்திஇலக்கியம், சைவசித்தாந்தம், திருமுறைகள், பதிகங்கள், ஆண்பெண்முக்திநிலை

## அறிமுகம்

உலகில் முதன்முதலில் தோன்றிய இந்து மதம் காலப்போக்கில் சிவலிங்கச் சித்தாந்தமாகவும் சிவசத்தி வழிபாடாகவும் மாற்றமடைந்துள்ளது. இப்படிப்பட்ட இந்துமதத்தின் உயரிய சைவ நெறிகளை முற்றுமுணர்ந்த மகான்கள் நூற்றாண்டுகள்தோறும் தோன்றி, உலகோர் உய்யும் வழியைக் காட்டி வந்துள்ளனர். இவர்களுள் யாழ்ப்பாணத் தீபகற்பத்தருகிலுள்ள காரைத்தீபத்தில் வாழ்ந்து, சமாதியடைந்த சுவாமி முருகேசப்பெருமாள் அவர்கள் வணக்கத்திற்குரியவராக விளங்கியுள்ளார். சைவமத இறையருளால் அதிசயிக்கத்தகுந்த அற்புதங்கள் பலவற்றைச் செய்து காட்டித் தன்னை அண்டிவந்தோர்க்கு உய்யும் வழிகாட்டியாக வாழ்ந்தவர். இன்று அனைவரும் போற்றி வணங்கும் தெய்வமாகத் திகழ்கிறார். இவரது ஆசிரமத்தில் வாழும் பெண்ணடியார்களுள் தலைசிறந்த தலைச்செல்வி மேருபுத்திரி ஆவார்.சைவ சித்தாந்தத்தில் இவருக்கு இருக்கின்ற ஆழமான ஞானம் பலரை வியப்பில் ஆழ்த்துகிறது. அதன் விளைவாகவே இவரது நூல்கள் பல சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக்கொண்டு அலசி ஆராய்ந்து விளக்கும் முகமாக அமைந்துள்ளன. இவரது ஆழ்மனவுணர்வு சைவநீதியை உலகெங்கிலும் பரப்புவதாக அமைந்துள்ளது. அதன் வெளிப்பாடே பக்திப் பரவசங் கமழும், சைவபக்தி இலக்கிய துதிப்பாடல்களும் மற்றும் சைவசித்தாந்த விளக்கங்களும் அனைவராலும் மனங்கொள்ளப்பட்டு சமயம், தத்துவம், சைவசித்தாந்தம் ஆகிய பிரிவுகளை தெளிவுபடுத்துகின்றது..

மேன்மைகொள் சைவநீதியை எடுத்துக்காட்டுவன சிவாகமங்களாகும். சைவசமய நூல்களாக வேதங்களும் ஆகமங்களும் விளங்குகின்றன. எனினும் உயிர்கள் முக்தியடையும் நெறியை சுட்டுவன சிவாகமங்களேயாகும். இறைவன் திருப்பெருந்துறையில் ஞானகுருவாகி வந்து மணிவாசகப்பெருமானுக்குச் சிவாகமங்களை உபதேசித்தருளியமை யாவருமறிந்ததே. மணிவாசகப் பெருந்தகையார் அந்த உபதேசத்தையுள்ளெடுத்துத் திருவாசக மழையாகப் பொழிந்தருளினார். ஞான திருவாசகம் பெண்களும் முத்திபெறுந்தகைமையைக் கூறும் திவ்ய ஞானநூலாகும். திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், திருவன்னைப்பத்து என்னும் பதிகங்கள் பெண்களை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டவையாகும். பெண்ணுயிர்களும் முத்திபெறும் உரிமையைச் சுட்டிக்காட்டித் தனது ஞானவாசகத்திற் பேசியுள்ளமை இந்நூலில் தெளிவாகின்றது. திருவண்ணாமலையில் தான் கண்ட தபோதனிகளைப் பொருளாக வைத்துக்கொண்டு திருவெம்பாவைப் பதிகம் பாடியருளியமை நோக்கற்பாலதாம். இதுகாறும் ஆணடியார்கள் தோன்றி ஆணடியார்களை அறைகூவியழைத்தச் சிவநெறிக்கு வரும்படி வழிகாட்டினார். மணிவாசகப்பெருமானின் திருவாசகப் பெருமை, அதனுள்ளும் பெண்ணுயிர்களும் முத்திபெறுந் தகுதியுடைமை என்னுமிரண்டு நோக்கங்கள் தில்லைநடராஜப் பெருமானால் ஏற்றுக்கொள்ளப்பட்டமையை இறைவன் தன் கைப்பட எழுதிய சங்கதியை உலகிற்குணர்த்துவதே வியன்தில்லைச்சிதம்பரம், எனும் இந்நூலாகும் .

எனவே, பெண்களும் முத்திநிலை அடையலாம் என்பது மீங்குறுதியாம். இறைவன் முன்பு, ஆணுயிர் பெண்ணுயிர் எனும் பேதமில்லை, ஈங்குயிர் பசுவெனப்படும். ஆண்பெண் பேதம் கன்மபேதத் தோற்றமாம். உயிர்கட்கு முத்தி பெறும் உரிமை இறைவனால் வழங்கப்பட்ட வெகுமதி. உலகியற் பொருட்களில் வைக்கும் அன்பை இறைவன் திருவடியில் வைத்துவிட்டால், பேரின்பமன்றோ. ஈங்கு யான் பெற்ற பேரின்பம் எந்தப் பெண்ணாலும் பெறமுடியும் என்பதை ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

சைவசித்தாந்த சிவஞானியாம் மணிவாசகரைப் போன்று ஆலவாய்க் குருமணி சுவாமி முருகேசப் பெருமானும் சைவசித்தாந்த ஞானியாம். எவ்வுயிரும் ஈடேறவேண்டும் என்னும் இரங்குகருணை கொண்டவர்கள் சிவஞானிகள்.அருட்சத்திருபமாம் ஞானாசிரியரதும், மீனாட்சியம்பாளினதும் கட்டளைப்படியும் வழிநடத்தல்படியும் எழுதப்பட்ட நூல்கள் பெரும்பாலும்

பெண்ணடியார்களை முன்வைத்துப் பாடப்பட்டதாகும். சைவசித்தாந்த ஞானியாம் மணிவாசகர் தனது திருவாசக நூலில் சைவசித்தாந்த உண்மைகளையே வெளிப்படுத்திப் பாடியுள்ளமை போலவே, சைவ சித்தாந்த உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு எழுந்ததே இந்நூலாகும். இறைவன் அடியெடுத்துத் தந்ததும் கந்தபுராணத்தில் உமைதவம் எனுந் தலைப்பையேயாகும். எனவேதான் புராணங்களிலிருந்தும் பெண்கள் வழிப்பட்டுய்ந்த முறைமை இப்பிரபந்ங்களில் பேசப்பட்ட பொருளாகவுள்ளது. கோயிற்புராணம், கந்தபுராணம், திருவாசகம், தேவாரத்திருமுறைகள், திருவிளையாடற் புராணங்களிலுள்ள சங்கதிகள் இந்நூலின் பிரபந்தங்களுக்கு தோற்றமாய் அமைந்துள்ளன.

**நூலின் நோக்கமும் பயன்பாடும்**

ஆசிரியரின் நோக்கம் ஆண்அடியார்களும் பெண்ணடியார்களும் சமய நிலையில் சமத்துவமுடையவர்கள் எனவும் ஆணடியார்களே தோன்றி இறைவனை அறைகூவி அழைத்து சிவநெறிக்கு வரும்படி வழிகாட்டியிருந்தார்கள். பெண்ணாசிரியரான இந்நூலாசிரியர் மணிவாசகப் பெருமானுடைய திருவாசகப் பெருமையையும், அதனுள் பெண்ணுயிர்களும் முக்தி பெறும் தகுதியுடைமை எனும் இரண்டு நோக்கங்களும் தில்லை நடராஜப்பெருமானால் ஏற்றுக்கொள்ளப்பட்டமை, இறைவன் தன்கைபட எழுதிய சங்கதியே உலகுணர்த்துவதாம் என்பதே ஆசிரியரின் முக்கிய நோக்கமாகும். பெண்களும் முக்திநிலையடையலாம் என்பது உறுதியாம் என்பதை ஆசிரியர் அனுபவத்துடன் வலியுறுத்துகிறார். இறைவன்முன் ஆணுயிர் பெண்ணுயிர் எனும் பேதமில்லை. ஆண், பெண் பேதம் கன்ம பேத தோற்றம் என ஆசிரியர் கூறுகின்றார்.உயிர்களுக்கு முக்தி பெறும் உரிமை இறைவனால் மட்டுமே வழங்கப்பட்ட வெகுமதியாகும். உலகியற் பொருட்களில் வைக்கும் அன்பை இறைவன் திருவடியில் வைத்துவிட்டால் பேரின்பம் பெறலாம். ஆசிரியராகிய யான் பெற்ற பேரின்பம் எந்தப் பெணிணாலும் பெற முடியும் என்பதை இந் நூலாசிரியர பயன்படக்கூறுகின்றார். எனவே இறைவன், கோவில் வழிபாடு, குரு வழிபாடு என்பன கைகூடப்பெற்றால் ஆண், பெண் பேதமின்றி முக்திபெறலாம் என்பதை ஆசிரியர் தனது அனுபவத்தினூடாகப் பகிர்ந்து கொள்ளுகின்ற முயற்சியே இந்நூலுருவாக்கத்தின் நோக்கமும் பயன்பாடுமாகும்..

**நூலில் கூறப்பட்டுள்ள விடயங்கள் :**

**பதிகங்களில் கூறியுள்ள விபரங்கள்**

கோயிற்புராணம், கந்தபுராணம், திருவாசகம், தேவாரத்திருமுறைகள், திருவிளையாடற்புராணங்களிலுள்ள சங்கதிகள் இப்பதிக நூலுக்குத் தோற்றமாய் அமையப்படுகின்றன. ஆசிரியர் நூலை இயற்றுவதற்கு இறைவன், குரு, கோவில்வழிபாடுகள், சைவசித்தாந்தப்பொருளுண்மை, பெண்களும் முக்திநிலை பெறலாம் ஆகிய ஐந்து விடயங்களுக்கும் முக்கித்துவமளித்து பதிகங்களை இந் நூலாசிரியர் இயற்றியுள்ளார். தில்லைக்குறள், போற்றித்திருவடிவெண்பா, திருவடி ஞானசித்து, சிவானந்தத்தில்லை, கோயிற்சிறப்பு, தில்லைச் சிதம்பரப் பதிகங்கள் எனும் ஐந்து தலைப்புக்களில் மேலும் பதினைந்து விடயங்களையும் விரிவுபடுத்துகின்றார். தில்லை, தில்லையூர் பொன்னம்பலம், திருநீலகண்டப்பதிகங்கள், சிதம்பரக்கோயில், தில்லைச் சிவானந்த எல்லை, குருவருள்தில்லை, உயிர்க்குயிராயந் திருவிருத்தம் எனும் விபரங்களையும் விரிவாக எடுத்துக்கூறியுள்ளார். தில்லைக்குறள், போற்றித்

திருவடிவெண்பா, திருவடிஞானசித்து, சிவஞானத்தில்லை, பதினேழுபதிகங்கள் என முழுவதுமே ஐந்நூற்றம்பது பாடல்களாக இந் நூல் அமையப்பெற்றுள்ளது.

"அம்பலம் என்பதூஉம் ஐந்தொழில் ஆடல்
அம்பலம் என்பதூஉம் ஐந்தெழுத்து ஆடல்
அம்பலம் என்பதூஉம் ஐந்துபூத ஆடல்
அம்பலம் சேரலாம் எல்லீரும் வாரிரே."

(வியன்தில்லைச்சிதம்பரம் - சிவானந்த தில்லை - கோவிற்சிறப்பு- 16)

**சிவ வழிபாட்டு சிறப்பு**

பாடல்களினூடாக சிவவழிபாட்டின் சிறப்பு, சிவபேதங்கள், அடிமுடிதேடியகதை, பாற்கடல்கடைந்த கதை, தில்லை நடராஜப்பெருமானிடம் ஆசிரியர் வேண்டும் வரங்கள், கோவிலமைவிடம், கோயிற்சிறப்பு, ஆலயவழிபாடு, சிதம்பர நடராஜனிடம் பக்தர்கள் கொண்டிருக்கும் பக்தியும் நம்பிக்கையும், இறைவனைபோற்றி வழிபடும் பதிகங்கள் என பல்வேறு அம்சங்களை ஆசிரியர் தனது பாடல்களினூடாக எடுத்துக்கூறி சைவபக்தி இலக்கியத்தை முன்னிலைப்படுத்தி கூறப்பட்டுள்ள விடயங்களை சமயம், தத்துவம், சித்தாந்தம் எனும் தளங்கள் ஊடாக விரிவுபட எடுத்துக் கூறுகிறார்.

"சிதம்பரநடனம் சிவாகமப் பிறப்பு
சிதம்பரநடனம் வேதங்கள் பிறப்பு
சிதம்பரநடனம் மந்திரங்கள் பிறப்பு
சிதம்பரநடனம் உயிரின் பிறவியிறவியெல்லை."

(வியன்தில்லைச்சிதம்பரம் - சிவானந்த தில்லை - கோவிற்சிறப்பு- 57)

**நூலாசிரியரின் உள்ளார்த்தம்**

இந்நூலாசிரியர் மேருபுத்திரி ஒரு புனிதவதியரக நூல்முழுவதும் காட்சி அளிக்கின்றார். அவரது நூல்கள் அனைவரின் பயிலுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியது. திருமுறைகளிலும், மெய்கண்ட சாத்திரங்களிலும் அவருக்கு அமைந்திருக்கும் தோய்வும், ஆர்வமும் வெள்ளிடைமலை. அகண்ட பாரதத்தின் மரபு, பண்பு ஆகியவற்றை இறையருளால் காக்க விழைவோர் வரிசையில் அவர் முதலிடம் பெற்றுள்ளார்.

ஆசிரியரின் பல நூல்களில் "தில்லைச் சிதம்பர விலாசம்" எனும் நூலும் சிறப்பிடம்பெறுகிறது. இதில் "பொன்னார் மேனியனே" என்று தொடங்கும் பாடல் நம்பி ஆரூரரின் பாடலையும், 'அரிது அரிது' என்று தொடங்கும் பாடல் ஔவையாரின் பாடலையும், 'தானே வந்து' என்று தொடங்கும் பாடல் திருவாசகத்தையும், ஏனைய பாடல்கள் போற்றத்தக்க ஞானநெறியினையும் நினைவூட்டி நம்மை சிந்திக்க வைக்கின்றன.

அம்மையாரின் "கோயில் ஒருபா ஒருப.்.தும் பதிகங்களும்" சிவானந்தம் பற்றி பயிற்றுகின்றது. சிவ நடனக் காட்சியை நம் கண்முன் காட்டுகிறது. மேன்மைகொள் சைவநீதி உலகெலா்ம் ஒளிர பாடுபடுவர் நம் அம்மையார். எழுத்து வளம் கைவரப் பெற்ற அவர் எளிமையின் எல்லையில் நிலை

பெற்றுள்ளார். ''ஏழையேன் ஏதுஞ் செய வல்லனோ'' என்ற இந்நூலில் பதிவு செய்திருக்கும் அவர், ''எல்லாம் நின் செயலே'' என்றும் கூறியுள்ளார்.இறைவனிடமே பக்தியால் சரணாகதியடைகின்றார்.

தில்லை என்பது, ''நல் உயிர் எல்லாம் நல் அருள் பெற்றிட'' நாட்டிய அருள் தலம் என்று அறிவிக்கின்றார். தூய உள்ளமே திருத்தில்லை. இத்தலம் என்பது சிவசக்தியின் பீடம். பாலுண் குழவி பசுங்குடர் பொறாது என்று நோயுண் மருந்தை தாய் உண்டாங்கு என்றபடி, சிவானந்தத்தை உயிர்கள் தாங்கும் பொருட்டு மட்டுப்படுத்தி நடராஜனின் பக்கத்தில் இருந்து அருள்பாலிக்கும் சிவகாமியின் பேரருள் இங்கு இயங்குகின்றது. சிவன் அருளாள் தான் சிவனை வணங்க ஒல்லும். சிவகாமியே இதற்குச் சாட்சி. 'சிவலோகம் காட்டும் சிற்றம்பலமே' நாம் பெற்றுள்ள பெரும் பேறு என்பதை ஆசிரியர் நிலைநிறுத்துகின்றார்.

''படவப்பாம்பரை யார்த்தபரமனைப் புலியதள் பொருத்திப்
பொன்மன்று புகுந்தாடும் பரமேட்டியை
இடவக்கொடி யொன்றுடைய இறைவனை இமையாத்
தேவர்கள் இருக்கினால் போற்றுமிறையைக்
கடவத்தான் கன்மமாயை யாணவமுதலாந் தொடக்கினைக்
கனகசபை புகுந்தாடுஞ் சபேசனைத்
தடவத்தண்ணருள் தடமலர்ப்பாதந் தூக்கிய தில்லை
நடேசனைச் சித்தத்திருத்தியும் காணாதே
காலங்கழிகின்றதே.''

(வியன்தில்லைச்சிதம்பரப் பதிகம் - 16, பாடல் 9)

மேலும் 'காரைதீபம் தந்த ஞானதீபம்' என்ற நூல் அம்மையார் அருளிய நூல்களில் மற்றுமொன்றாகும். யாழ்தீவகத்தின் மேற்குக் கரையோரத்தில் வீற்றிருந்து சிவபூமியாம் பரத கண்டமொடு இலங்கையைத் தனது ஞானவொளியினால் காத்தருளிய ஞானதீபத்தின் ஞானப்பிரகாசத்தை பேசுகின்ற நூல். ஞானதீபத்தின் பெருமையை அம்மையார் உரைநடையில் இந்நூலில் தந்திருப்பது அவரின் சமய அனுபவ வெளிப்பாடாகும். இவ்வற்புத நூலைப் படித்தால் பக்தி பரவசம் ஏற்படும். வியன்தில்லைச்சிதம்பரத்திற்கு பக்கதுணையான நூலாகும்.

'வியன் தில்லைச் சிதம்பரம்' என்ற திப்பிய கிரந்தம் ஏனைய நூல்களை அலங்கரிக்கும் ஒரு பெரிய, அரிய நூல். இது துகளறு போதமாய்த் துலங்குகின்றது. இவ்வொரு பிரிவுகளும் பதினைந்து பனுவல்களின் தொகுப்பு. குறள் வடிவிலும், வெண்பா வடிவிலும், சிந்து வடிவிலும், விருத்தப்பா வடிவிலும் பல பாக்கள் உள்ளன. இத்தொகுப்பில் இறைவனை தரிசிக்கலாம். வேதாந்த, சித்தாந்த சாரமாய் இத்தொகுப்பு அமைந்துள்ளமை நூலின் மேம்பட்ட சிறப்பாகும்.

அம்மையார் சொல்லுராய்ந்து எழுந்த தீயின் சுடர் எழக் கனிந்த நாவுடையார், மண் மாசு அகன்ற வான்படு சொற்கள் கொண்டு சிவாந்தரங்கமான பனுவல்கள் வரைந்தார். வேத ஆகம இதிகாச புராண சாத்திர தோத்திரச் சாரமாக அருளியிருக்கும் கீர்த்தியைப் போன்று வியன் தில்லைச் சிதம்பரம் காணப்படுகின்றது.

**முடிவுரை**

மேருபுத்திரியின் வியன் தில்லைச் சிதம்பரம் எனும் நூல் சமய வாழ்வியலையும் கோயில் பண்பாட்டு விழுமியங்களையும் கோயில் வழிபாட்டு முறைகளையும் கோயிற் சிறப்பையும் கூறுவதோடு குரு லிங்க சங்கம வழிபாட்டு பற்றிய மறைமுகமான கருத்துக்களையும் தருவதோடு இறைவன் மீது வைத்த நம்பிக்கையினாலும் குருவின் வழிகாட்டுதலினாலும் சமயவாழ்வியலில் சாதனை செய்யலாம் என்பதையும், ஆண் பெண் பேதமின்றி இறைமுக்தியைப் பெறலாம் என்பதனையும் இறைவனை பக்தியோடு வழிபட தேவார திருவாசக திருமுறை புராணங்களும் சைவசித்தாந்த பொருளுண்மைகளும் சைவ வாழ்வியலை நெறிப்படுத்துகின்றன என்பதனை ஆசிரியர் சைவபக்தி இலக்கியத்தினூடாக சைவத்தமிழ் உலகிற்கு வழியமைத்து கொடுத்து இந் நூலில் தெளிவுபடக் கூறியுள்ளார்.

**துணைநூல்கள் :**


மேருபுத்திரி. (2017), வியன் தில்லைச் சிதம்பரம்
சபாநாயகம் பிரிண்டர்ஸ், கீழ்வீதி, சிதம்பரம்.608001.

சிவபாதசுந்தரம்.சு. (2017) திருவாசகமணிகள்
ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்
மணிவாசகர்சபை, காரைநகர்.

மயில்வாகனம்.க. (2008), ஆண்டிக்கேணி ஐயனார் புராணம்
பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்
மணிவாசகர்சபை, காரைநகர்.

கணபதீஸ்வரக்குருக்கள் ச. (2002) ஈழத்துச்சிதம்பரம்
திருப்பாவைச்சபை வெளியீடு
ஈழத்துச்சிதம்பரம், காரைநகர்.

கருணாநிதி.நா. (2017) சைவசித்தாந்த கைநூல்
வீரமாணிக்க தேவன்துறை
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.

கந்தையா ஆ (1998) (பதி) திருவாதவூரடிகள்
புராணம் - மூலமும், உரையும்
அஷ்டலஷ்மி பதிகம்
கொழும்பு - 11